**கவனிக்க** .- 2026.01.02 ஆந் திகதிய 2470 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2471- 2026 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2026.01.09

2471ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 10 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 13 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026,சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 16ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


9 - B 82753 - 403 (2026/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள அரனாயக பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் கே. ஷாமலி பிரியங்கிகா பியதிஸ்ஸ ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன மூலம் 1986.03.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள கே/ பிரா 4052 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பொல்தெனிய குடியேற்றம், எனும் முகவரியில் வசிக்கும் ஹொரனாகாராயலா சுத்தனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கேகாலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 431 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.11.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் ஒருவர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.01.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கேகாலை நிர்வாக மாவட்டத்தின் அரனாயக பிரதேச செயலாளர் பிரிவின், கலபட கோரளை மேற்கு, நிகபிடிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள நிகபிடிய கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகம் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்படட வரைபடம் ஆ.கி.வ.கே. 1840 இன் காணித்துண்டு இலக்கம் 47 எனக் காட்டப்பட்டதும் 0.097 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி பொல்தெனிய குடியேற்றம் (காணியின் பெயர்) :

வடக்கு : ஆ.வ.கே. 1840 இல் காணித்துண்டு இலக்கங்கள் 31,30;
கிழக்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 46;
தெற்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 48 மற்றும் 49;
மேற்கு : இந்த வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 30.

கே. ஷாமலி பியதிஸ்ஸ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
அரநாயக்க,
2025.07.18.

01-93/1

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணி உறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ துணை காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையில்) வி.ஒ.எல்.எஸ்.ரத்னசேகர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் மேன்தகு சனாதிபதியினால் 1995.11.09ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் கே.பி.9236 ஐ உடைய உறுதிப்பத்திரத்தின் உரிமையாளரான 5/5 ஏ, அசோகபுர பாதை, சிங்கராஜகம, அல்பிடிய தெவனகலையில் வசிக்கும் கிரிஹடனலாகே தேவயாவிற்கு கையளிக்கப்பட்டு, கேகாலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இல க்கம் மாவ/3/98 இன் கீழ் 1995.11.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பிரதியீட்டாளராவதற்கு சட்டபூர்வமாக உரிமையான ஆள் இல்லாததன் காரணமாக அல்லது உரிமையுள்ளவர் இருந்தாலும் அவர் பிரதியீட்டாளராவதற்கு விருப்பமில்லாததால் பிரதியீட்டுக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் அந்தக் காணி உறுதிப்பத்திரம் மேலே சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக இங்கே அறிவிக்கின்றேன். இது சம்பந்தமாக ஏதும் எதிர்ப்புகள் இருப்பின் அவற்றை 2026.01.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கேகாலை நிர்வாக மாவட்டத்தின் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் துன்பலாத பத்துவ கிழக்கில் வேரகே கிராம அலுவலர் பிரிவில் அல்பிடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலைக்கு பொறுப்பாகவுள்ள நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் கே 490/019 உடைய கள பத்திரத்தில் / நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் பி.பி.கே.697 உடைய நில அளவை வரைபடத்தில் /.................. ஆல் தயாரிக்கபட்ட இலக்கம் ................ உடைய சுவட்டு வரைபடத்தில் இலக்கம் F உடைய காணித்துண்டு எனக் காட்டப்பட்டிருக்கும், விஸ்தீரணத்தில் ஹெக்டயார்/ 00 ஏக்கர், 02 றூட், 00 பேர்ச் கொண்ட கீழே விபரிக்கப்பட்ட எல்லைகளையுடைய அரசாங்க காணி- சிங்கராஜவத்த:

வடக்கு : துண்டிலக்கம் C மற்றும் E;
கிழக்கு : துண்டிலக்கம் G மற்றும் C;
தெற்கு : உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் துண்டிலக்கம் N;
மேற்கு : உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் துண்டிலக்கம் E.

வி.ஒ.எல்.எஸ். ரத்னசேகர,
பிரதேச செயலாளர்/ துணை காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடையில்).

பிரதேச செயலகம்,
மாவனல்லை,
2025.01.22.

01-93/2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் எச்.ஆர்.மதுஷி பூர்ணிமா அபேரத்தின ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் (320 ஆம் அத்தியாயம்) இன் கீழ் ஆளுநர் அவர்களினால் 1961.09.25 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள R 6609/ 6610 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான உடகொடமவத்த, உந்துகொடவில் வசிக்கும் சமாட் மொஹமட் மெஹிடீன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு அவிஸ்ஸாவலை மாவட்ட காணிப் பதிவகத்தில் R 6609/6610 ஆம் இலக்கத்தின் கீழ் 1961.11.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்திற்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2026.01.30 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கேகாலை நிர்வாக மாவட்டத்தின் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் பெலிகல் கோரலே கந்துபிடபத்துவ தெற்கு, புஸ்பனே கிராம அலுவலர் பிரிவில் புஸ்பனே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ......... பொறுப்பில் இருக்கின்ற மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 4/ 18, 26 ஆம் இலக்க களப்பத்திரத்தில்/ ................. அவர்களினால் தயாரிக்கப்பட்ட .................... பீ.பீ.ஏ.811 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் / .................... அவர்களினால் தயாரிக்கப்பட்ட ................. இலக்க ........ எல்லைக் குறிப்பில் இலக்கம் 153 ஆம் இலக்கம் கொண்ட, 02 றூட், 16 பேர்ச் அளவிலான காணித்துண்டு மற்றும் 132 மற்றும் 140 ஆம் இலக்கங்கள் 03 ஏக்கர், 01 றூட் 33 பேர்ச் அளவிலான காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகளுக்குள் அமைந்துள்ளதுமான உத்துகொட தோட்டம் எனும் அரசாங்க காணி:

காணித் துண்டு இலக்கம் 153
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 156;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 154;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 156 மற்றும் கல்;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 160 1/2.

காணித் துண்டு இலக்கம் 132

வடக்கு : தெல்வல எல ஒதுக்கு;
கிழக்கு: வாய்க்கால்;
தெற்கு : வீதி;
மேற்கு : வீதி.

காணித் துண்டு இலக்கம் 140

வடக்கு : வீதி;
கிழக்கு: வாய்க்கால்;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 141;
மேற்கு : வீதி.

எச்.ஆர்.மதுஷி பூர்ணிமா அபேரத்தின,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
புலத்கொஹுபிடிய,
2025.07.14.

01-93/3

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

சப்பிரகமுவ மாகாண சபையின் கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள வரகாபொல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஏ.எம்.ரங்கன சஜீவ ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சனாதிபதி அவர்களால் 1997.01.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள கே.பெ.14534 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான படதோலோவத்த குடியிருப்பு எனும் முகவரியில் வசிக்கும் மாரசிங்க பெடிகே சுமனபால என்பவருக்கு கையளிக்கப்பட்டு கேகாலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் வர/ 7/123 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.08.13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2026.01.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கேகாலை நிர்வாக மாவட்டத்தின் வரகாபொல பிரதேச செயலாளர் பிரிவின் கீரவெலி கிழக்கு பற்றில் பெலிகல் கோறளையிலுள்ள மாஹென குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாஹென எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கேகாலை நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ................. ஆம் இலக்க வெளிக்களத்தாளில் மூ.பீ.எ. 2108 இரேகை வரைதலில் 98 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.121 ஹெக்டயார்/ 00ஏ.01 றூ.00பே. விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித்துண்டு "படதோலோவத்த" :

வடக்கு : ஐ.எச்.பண்டாரவிற்கு உரித்துடைய அரசாங்க காணி;
கிழக்கு : பாதை மற்றும் எம்.சந்திராவதிக்கு உரித்துடைய அரசாங்க காணி;

தெற்கு : மாரகஹமுல தனியாருக்கு உரித்துடைய காணி;
மேற்கு : ரிதியபான கால்வாய் இருப்பு.

ஏ.எம்.ரங்கன சஜீவ ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
வரகாபொல,
2025.06.16.

01-93/4

---

**திருத்தம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

எனது தொடர்பு இலக்கம்:ஒලි/ 10/2/77.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1890 ஆம் இலக்க மற்றும் 2014.11.21 ஆந் திகதியிட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவு 104 ஆம் பிரிவின் கீழ் உள்ள அறிவிப்பில் அளிப்புப்பத்திர இலக்கம் R 10590 எனவும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட திகதியானது 2026.02.23 ஆந் திகதி எனவும் திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

ஆர். பிரபாகரன் ,
பிரதேச செயலாளர்,
(கடமை கவனிப்பு),
வண்ணாத்திவில்லு.

பிரதேச செயலகம்,
வண்ணாத்திவில்லு,
2025.12.27.

01-116

---

# நானாவித அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78236.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/ L-09/ 01/04.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அநுராதபுரம் மாவட்டத்தின் இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 510, கடியங்கல்ல கிராம அலுவலர் பிரிவின் கடியங்கல்ல கிராமத்தில் காணி அலுவலரால் தயாரிக்கப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் இ.கி.ப. 825 இன் துண்டு இலக்கம் 02 இன் ஒரு பகுதியாக காண்பிக்கப்பட்டுள்ள 02 றூட் 34 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணியை வர்த்தக நோக்கத்திற்காக திரு. செனெவிரத்ன முதியன்சேலாகே தய்வின் செனெவிரத்ன என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு: சுஜீவா என்பவரின் காணி;
கிழக்கு: பிரவேசப் பாதைக்கான ஒதுக்கு;
தெற்கு: தம்மிக்கா என்பவரின் காணி;
மேற்கு: கிளைப் பாதை ஒதுக்கு.

02.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23ஆந் திகதி முதல் 2055.07.22 ஆந் திகதி வரை);

வருடாந்தக் குத்தகைத் தொகை:2025 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2 % ஆகும். 2025 ஆம் ஆண்டின்

காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டின் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4 % ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க் கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை:தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப் பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்கள் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்து வதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10 % தண்டனை வட்டி அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
இலக்கம் 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025.12.29.

01- 138